Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 15

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி சித்திரை 16 ஆம் நாள் துல்ஹஜ் 15 (28-4-64 செவ்வாய்க்கிழமை இதழ் 77

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 1 -00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |


# மூவர் சுட்டுக் கொலை; மற்றும் 2பேர் நிலை கவலை

## மருதனுமடத்தில் கோரநிகழ்ச்சி

### ஒருவர்கைது; மற்றொருவர் தலைமறைவு; துப்பாக்கிகள் பரிசீலனை

யாழ்ப்பாணம், செவ்வாய்

**சுன்னாகம் பொலிஸ்பகுதியில் மருதனுமடத்துக்குச் சமீபத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஒரு துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் இருவர் ஸ்தலத்தில் மாண்டனர். மற்றுமொருவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படுகையில் மரணமானார். மற்றும் இருவர் பலத்த காயங்களுடன் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

காணித் தகராறினால் இருதரப்பினருக்கிடையிலிருந்த சச்சரவு மாட்டுவண்டிச்சவாரி பார்க்க வந்திருந்தபோது மோதலாக மாறி பின்னர் அன்றிரவு துப்பாக்கிப் பிரயோகத்தில் முடிந்ததாகக் கூறப்படுகிறது. பொலிஸார் புலன்விசாரணை செய்துவருகின்றனர். இப்பகுதியிலுள்ள துப்பாக்கிகள் பரிசோதனை செய்யப்படுகின்றன.

மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ஜி. எவ். எச். அத்துறுபாறு ஸ்தலத்தில் விசாரணை நடத்தியபின் பொலிஸ் உதவி அதிபர் திரு.ஏ. எஸ். மரியநாயகத்தின் கேள்விப்படி அரசாங்க பரிசோதகர் ஸ்தலத்தைப் பரிசோதனை செய்ய அவருக்குக் கட்டளையனுப்பப்பட்டது.

சுன்னாகம் பொலிஸைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. எஸ். விக்னேஸ்வரமூர்த்தி, உதவி இன்ஸ்பெக்டர் திரு. சி. என். தியாகராசா ஆகியோர் தலைமையில் புலன்விசாரணை நடைபெறுகிறது. உதவிப் பொலிஸ் அதிபர் திரு. மரியநாயகத்தின் கட்டளைப்படி அப்பகுதியிலுள்ள துப்பாக்கிகள் பரிசோதனை செய்யப்படுகிறது.

நாகமுத்து சாமுவேல் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். நாகமுத்து சிவலிங்கம் தலைமறைவாகவிருப்பதாக அறிவிக்கப்பட்டபது.

உரும்பிராயைச் சேர்ந்த நாகமுத்து என்பவர் சுன்னாகம் கல்லாக்கட்டுவனில் காணி வாங்கி வீடுகட்டியிருந்து வருகிறார். அவருக்கும் அயலிலிருந்துவரும் அவருடைய வகுப்பைச் சேர்ந்த சிலருக்குமிடையில் அவர் வாங்கிய காணியுடன் சேர்ந்த பாதையொன்றினால் தகராறு ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தில் சென்ற ஞாயிறன்று பொலிஸ்மைதானத்தில் நடைபெற்ற வண்டில்சவாரி பார்க்க வந்தவர்களை தாக்க நாகமுத்துவின் மக்களான சாமுவேலும், சிவலிங்கமும்சிலரை ஏவியதாகவும் இதனால் மறுதரப்பினர் தாக்கப்பட்டனர் என்றும் அதன்விளைவாக யாழ்ப்பாணத்திலிருந்து இருபகுதியினரும் வீடு திரும்பியதும் வாக்குவாதப்பட்டனர் என்றும் அல்தத் தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடைபெற்றதென்றும் அறியப்படுகிறது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் மூத்தான் வைரவன், முத்து சின்னத்தம்பி என்பவர்கள் ஸ்தலத்திலேயே மரணமானார்கள். கணபதி ஐயம்பிள்ளை என்பவர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டு அனுமதிக்கப்படமுன்னர் இறந்து போனார். கறுவல் பரமு, கணபதி முருகன், பரமு சின்னத்தம்பி என்பவர்கள் படுகாயங்களுடன் மிக ஆபத்தான நிலையில் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். பத்திரிகை அச்சுக்குப் போகும்பொழுதும காயமடைந்தவர்களின் சீவமோச நிலை மாறவில்லையென்று சொல்லப்பட்டது.

## கீரிமலையில் பஸ் நிலையம்

### ரூ. 2500 செலவில் நிறுவத் தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

2500 ரூபா செலவில் கீரிமலையில் ஒரு பஸ் நிலையம் நிறுவுவதெனத் தெல்லிப்பழை கிராமசபை சென்ற மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானித்துள்ளது.

இலங்கையின் வடபகுதிக்குச் சுற்றுப் பிரயாணத்தில் வருபவர்க்கோ, யாத்திரிகர்களுக்கோ விடுதலைக் காலம் கழிப்பவர்களுக்கோ தரிசிப்பதற்கு முக்கிய இடமாக இருந்தும் இதுவரை கீரிமலையில் பஸ் தங்குவதற்கு ஒரு நிலையம் இல்லாதிருந்தது.

---

## இடிவிழுந்து இளைஞன் மரணம், இருவர் காயம்

### வவனிக்குளத்தில் சம்பவம்

துணுக்காய், திங்கள்

வவனிக்குளம் குடியேற்றத் திட்டத்திலுள்ள ஒரு வீட்டில் நேற்று இடிவிழுந்ததன் விளைவாக ஒரு வாலிபர் ஸ்தலத்தில் மாண்டார். கணவனும் மனைவியும் பலத்த காயங்களுடன் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவனிக்குளம் பகுதியில் சென்ற இரண்டு தினங்களாக பகலில் கடும் வெய்யிலும் மாலையில் பலத்த காற்றுடனும் இடிமுழக்கத்துடனும்மழையும் பெய்து வருகிறது.

நேற்றுப் பிற்பகல் வவனிக்குளம் குடியேற்றத்திட்டத்தில் இரண்டாம் யூனிட்டில் ராமுனகு என்பவரின் வீட்டில் இடிவிழுந்தது. இதனால் கனகுவும் அவரது மனைவியும் பலத்த காயமடைந்தனர். இவர்களிருவரும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அடுத்த வீட்டிலுள்ள கந்தவனம் என்பவரின் 18 வயது இளைஞர் இடிவிழுந்த அதிர்ச்சியினால் ஸ்தலத்தில் மாண்டார்.

## 'நியூஸிலாந்து உதவியளிக்கும்'

வெலிங்டன், ஏப். 27

மலேஸிய வைப் பாதுகாக்க நியூஸிலாந்து திருப்புகளை அனுப்புமென பிரதமர் ஹோலியோக் கூறினர்.

---

பெட்ரோலிய

## தொழிலாளர் வேலை நிறுத்தம்

### யாழ்ப்பாணத்து நிலைய தாங்கிகள் சீல் வைக்கப்பட்டன

கொழும்பு, திங்கள்

இலங்கை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 950 தொழிலாளர்கள் இன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் நாட்டின் பல பாகங்களிலும் பெட்ரோல், பெட்ரோலியப் பொருட்கள் ஆகியவற்றின் விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை தாம் வேலைக்குத் திருப்புவதில்லை என தெரிவித்துள்ளனர்.

இவ்வேலை நிறுத்தத்தால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நடைபெறும் வேலைகளில் மூன்றிலொரு பங்கே நடைபெற முடியுமாதலால் பெட்ரோல் விநியோகத்தில் பெரும் அசௌகரியங்கள் ஏற்படும். இப்பொழுதுள்ள சேவைகள் மிக முக்கியமான இ. போ. ச. ரயில்வே பகுதி ஆகியவற்றுக்கே அத்தியாவசிய வேவைகளைக் கவனிக்கும்.

கொலன்னாவையில் சேவைக்கு வேண்டிய ஒரு உத்தியோகஸ்தரை இடமாற்றம் செய்தமையாலேயே தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்கின்றனர். பெட்ரோல் 'வவுச'ருக்குள் பெட்ரோல் பாய்ச்சும் ஊழியர்கள் 'வவுசர்' சாரதிகள், அவர்களின் உதவியாளர்கள் பெற்றோல் விநியோக கணக்கெடுக்கும் ஊழியர்கள் முதலியோர் வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்களில் சிலராவர். இவர்களின் வேலை நிறுத்தத்தால் நாட்டின் மற்

(6-ம் பக்கம் பார்க்க)

---

## அரசாங்கத்துடன் கூட்டுச்சேர எம். ஈ. பி. யின் நிபந்தனை

### 'இருமந்திரிகள் நீக்கப்படவேண்டும்'

கொழும்பு, திங்கள்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து மற்ற பிற்போக்குவாதிகளுடன் திரு. சி. பி. டி' சில்வா, திரு. மைத்திரிபாலசேனநாயக்கா ஆகிய இரு மந்திரிகளும் நீக்கப்பட்டால்தான் சிறிமா அரசாங்கத்துக்கு தமது ஆதரவை அளிக்க முடியும் என எம். ஈ. பி. யின் மத்திய கமிட்டி தீர்மானித்துள்ளது.

வெளிநாட்டு ஏகாதிபத்திய வாதிகளின் உதவியுடன் யு. என். பி. மீண்டும் பதவிக்கு வர முயற்சி செய்கிறதென்றும் 1956-ம் வருடத்தில் மக்கள் அடைந்த வெற்றி காப்பாற்றப்படுமென்றும் எம். ஈ. பி. அளித்த உறுதி காப்பாற்றப்படுமென்றும் வாக்குறுதிகள் செயல்படுத்தப்படுமென்றும் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## அழகையா முத்தமிழ் அரங்க திறப்புவிழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

பாஷையூர் துறைமுகத் திடலில் அமைக்கப்பட்டிருக்கும் அழகையா முத்தமிழ் அரங்கத்தை இன்று பிற்பகல் 5 மணியளவில் மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராஜதுரை திறந்துவைப்பார்.

இவ்விழாவுக்கு யாழ்ப்பாண மேயர் திரு. தா. ச. துரைராஜா தலைமைவகிப்பார். விழாவில் பல பிரமுகர்கள் உரைநிகழ்த்தவிருக்கிறார்கள். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

### மணிவாக்கு

பொறுப்பான பதவியை விரும்புபவர்கள் முதலில் தங்களைப் பரிசுத்தர்களாக்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்பை உணர்ந்து நடப்பின், கட்டுப்பாடான ஸ்தாபனம் அவசியமில்லை.

— பீட்டர் ஹோவர்ட்


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna
Telegram. EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு
சித்திரை 16 (28-4-64)


## பிரதமரின் சங்கடமான பிரச்னை

நுவரேலியாவிலே குளிர்ச்சியான சூழ்நிலையில் நாட்டின் முக்கிய பிரச்னைகளைப்பற்றி இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர்களுடனே பேச்சுகள் நடத்திவிட்டு பிரதமர் ஸ்ரீமாவோ கொழும்பு திரும்பி இருக்கின்றார். அப்பேச்சுகளின் முடிவுகளை தமது மந்திரிகளுக்கு இவ்வாரத்தில் பிரதமர் தெரிவிப்பாரென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த மந்திரிசபைக் கூட்டத்தில் செய்யப்படும் முடிவுகள் நாட்டின் எதிர்கால அரசியலைப் பெரிதும் உருவாக்குவதாக இருக்கும்.

கூட்டு அரசாங்கத்தை அமைப்பதுபற்றி அரசாங்கக் கட்சிக்குள்ளாகவே கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளதாயும் சில மந்திரிகளுக்கு இது பிடிக்கவில்லை என்றும் சொல்லப்படுகின்றது. அவ்வித மந்திரிசபை ஏற்படுமாகில் இரு மந்திரிகளும் வேறுசில எம். பி.க்களும்கூட மந்திரிசபையை விட்டு விலகி புதிய கட்சியை ஆரம்பிக்கலாமென்றும் பல பல வதந்திகள் எழுந்துள்ளன. இது பிரதமருக்கு மிகவும் சங்கடமான பிரச்னை.

இடதுசாரி ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த திரு. பிலிப் குணவர்த்தன நுவரேலியா சென்று பிரதமருடன் பேச்சுகள்நடத்தவில்லை. ஏன்? ஏற்கெனவே அவர் காலஞ்சென்ற பண்டாரநாயக்காவின் மந்திரிசபையில் இருந்து பின்னர் பிரதமரின் நம்பிக்கையை இழந்து மந்திரிப் பதவியிலிருந்து விலகியவர். இப்பொழுதுள்ள பிரதமர் விஷயமாகவும் அவர் இதுவரை காட்டிவந்துள்ள மனப்பான்மை மகிழ்ச்சியளிக்கக் கூடியதல்ல. அவருக்கு இந்த மந்திரிசபையிலேயே பல அரசியல் எதிரிகள் உள்ளனர். ஆனால் மற்ற இடதுசாரித் தலைவர்களின் நிலைமை அப்படியல்ல. ஆகவே திரு. பிலிப் கூட்டுமந்திரிசபையில் இல்லாமல் இருப்பின் அவ்வித மந்திரிசபைக்கு எதிர்ப்பு குறைவதுடன் அது நீடித்து நல்ல பணி செய்யக்கூடிய வாய்ப்பு முண்டு.

இது ஒருபுறமிருக்க, தமிழர் பிரச்னை தீர்க்கப்பட வேண்டிய அவசியத்தையும் அவசரத்தையும் நுவரேலியாவிலே அரசாங்கக் கட்சியினரும் இடதுசாரித் தலைவர்களும் உணர்ந்து அதுபற்றிப் பேசியதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நாட்டை எதிர்நோக்கியுள்ள எந்த முக்கிய பிரச்னையையும் தீர்க்க வேண்டுமானால் இந்நாட்டிலுள்ள எல்லா சிறுபான்மைச் சமூகத்தவரையும் இந்நாட்டிலே தாங்களும் மற்றவர் போல் சரிசமமானவர்கள் என்று உணரச் செய்ய வேண்டியது மிக அவசியமென்று அப்பேச்சுகளில் வற்புறுத்தப் பட்டதாம். இதைச் சில தீவிர வகுப்புவாதிகள் தவிர மற்ற அனைவரும் ஒப்புக் கொள்வர்.

மன்னாரில் கூடிய தமிழரசுக் கட்சியின் காரியக் கமிட்டியின் தீர்மானப்படி தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் பிரதமருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் தமிழருக்கு காலஞ்சென்ற பண்டாரநாயக்கா அளித்த உறுதிமொழி காப்பாற்றப்படவில்லை என்றும் ஸ்ரீமா அரசாங்கம் அவ்வுறுதி மொழிக்கு மாறான நடவடிக்கைகளை எடுத்து தமிழரின் ஆதரவை இழந்து வருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். அதாவது தமிழரின் ஆதரவு ஸ்ரீமாவுக்கு வேண்டுமாயின் பழைய உறுதிமொழிப்படி காரியம் செய்ய வேண்டுமென்றாகின்றது. இந்தக் குறைந்த அளவு கோரிக்கையை இச்சமயம் பிரதமரோ இடதுசாரியினரோ தங்கள் சுயநலனை முன்னிட்டாவது அலட்சியம் செய்ய முடியாது.

இதற்கிடையே மொழிவழக்கில் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பும் தமிழர் கட்சிக்கு ஆதரவளிப்பதாக இருப்பதால் தமிழர் பிரச்னையைத் தீர்க்க வேண்டிய அவசியம் பலகாரணங்களாலும் அதிகரித்துள்ளது. பிரதமர் விசேஷ அரசியல் ஞானமும் தீர்க்கதரிசனமும் உறுதியும் காட்ட வேண்டிய சமயம் வந்துவிட்டது. அவர் என்ன செய்யப்போகிறார் என்பதை நாடனைத்தும் ஆவலுடனும் கவலையுடனும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது.

# "கருத்துத்தெரிந்தபின்னரே கல்வி அறிக்கை அமுலாகவேண்டும்"

## அரசினர் தமிழாசிரியர் கோரிக்கை

உடுப்பிட்டி, திங்கள்

பல்வேறு ஆசிரிய சங்கங்களினதும் ஸ்தல ஸ்தாபனங்களினதும் அபிப்பிராயம் பெறுமல் கல்வி, வெள்ளையறிக்கையை அமுல் செய்யவேண்டாம் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் வடமராட்சிக் கிளைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சென்ற சனிக்கிழமை பிற்பகல் திரு. வே. செல்லையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பன்னிரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சில முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

மாணவ ஆசிரிய பரீட்சைக்குத் தோற்றிய தமிழ் மாணவரின் பெறுபேறுகள் பரீட்சை முடிந்து ஆறுமாதங்களாகியும் வெளியிடாதலைதயிட்டு இச்சங்கம் தனது ஆழ்ந்த கவலையை தெரிவிப்பதுடன், உடனடியாக பெறுபேறுகளை அறிவித்து, நியமனங்கள் வழங்குமாறு கல்வி மந்திரியைக் கேட்டுக் கொள்கிறது.

தமிழாசிரியர் தராதரப்பத்திரம் பெற்று வேலையின்றியிருக்கும் ஆசிரியர்களுக்கு உடனடியாக நியமனம் வழங்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறது.

மாணவரின் கல்வி போதனுமொழி பெற்றோரின் விருப்பத்திற்கு ஏற்றவாறு அமைய வேண்டுமென வெள்ளையறிக்கையில் கூறப்பட்டிருப்பது போல் இந்நாட்டில்வதியும் எந்தப் பெற்றோருக்கும் அவ்வுரிமை இருக்க வேண்டும். மலைநாட்டில் வாழும் பிரஜாவுரிமையற்ற பெற்றோரின் குழந்தைகளும் இந்த நாட்டில் வழங்கும் போதனு மொழிகளிலொன்றான தமிழைத் தெரியும்உரிமை அளிக்கப்பட வேண்டும்.

வில்மட் பெரேராவின் சம்பள அறிக்கை உடனடியாக அமுல் நடத்தப்பட வேண்டும்.

சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்களும் வீடுகட்டவோ காணி வாங்கவோ இருவருட சம்பளத்தை முன் பணமாகப் பெற வகை செய்யப்படவேண்டும்."

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வே. செல்லையா, செயலாளர்: திரு. க. தர்மராசா, தனாதிகாரி: திரு. பொ. ஆறுமுகம், உப-தலைவர்கள்: திரு. சி. குலசேகரம், திரு ஆ. கணபதிப்பிள்ளை, உப-செயலாளர்கள்: திரு. மு. கந்தப்பு, திரு. க. கோபாலரத்தினம், உப-தனாதிகாரி: திரு. சொ. நடராசா.

# "இனத்தை அழிப்பதன் மூலம் சோஷலிஸம் ஏற்படாது"

## லெனின் தினக்கூட்டத்தில் உடுவில் எம். பி. பேச்சு

யாழ்ப்பாணம், செவ்வாய்

"சோஷலிஸப் பாதையில் செல்வதாகச் சொல்லிக்கொள்ளும் இலங்கை அரசாங்கம் நாட்டை ஒற்றுமைப்படுத்த இரு மொழி பேசும் ஈரினங்களை ஒரு மொழிக்குட்படுத்த முயற்சி செய்கின்றது. ஆனால் சோஷலிஸம் வளர்ச்சி பெற்ற ரஷ்ய தேசத்தில் ஒவ்வொரு மொழிக்கும் நாட்டில் சம உரிமைகொடுக்கப்பட்டு தேச ஒற்றுமை சந்தேகத்திற்கு இடமில்லாத முறையில் நிலைநாட்டப்பட்டுள்ளது."

இவ்வாறு உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் சுன்னுகம் கிராம முன்னேற்றச் சங்க முன்றலில் நடைபெற்ற லெனின தினக்கொண்டாட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்

திரு. தர்மலிங்கம் மேலும் குறிப்பிட்டதாவது.-

இலங்கையில் தமிழ் பேசும் பகுதிகளில் லெனின் விழாக் கொண்டாடுவது மிகப்பொருத்தமானதாகும். ஏனெனில் தமிழ் பேசும் மக்கள் ஒரு நசுக்கப்பட்ட இனமாக இருக்கின்றனர். ஆனால் நசுக்கப்பட்டவர்களுக்காகப் போராடி மடிந்த லெனின் ஞாபகார்த்த விழா தமிழ் பேசும் மக்களிருக்கும் பகுதிகளில் கொண்டாடப்பட வேண்டியதே.

சோவியத் ரஷ்யா புரட்சி அரசாங்கத்தின் அதிகாரத்திற்குட்பட்ட காலத்தில் கசாக் என்ற ஒரு சிறுபான்மை இனத்தவர் கல்வி அறிவற்றவர்களாக, ஆனால் கசாக் பாஷை பேச மட்டும் தெரிந்தவர்களாக இருந்தனர். ரஷ்ய அரசாங்கம் முதலாவதாக இவ்வினத்தவரின் கசாக் பாஷையை எழுதப் படிக்கக் கூடியதாக ஓர் எழுத்தை உண்டுபண்ணி அவர்களுக்கும் கற்பித்து அப்பாஷையில் இலக்கண, இலக்கியத்தையும் உருவாக்கி ரஷ்ய தேசத்தின் நிர்வாக, தேசிய பாஷைகளுடன் ஒன்ருகச் செய்து அப்பகுதி மக்களின் திருப்தியைப் பெற்று தேச சேவையில் அம்மக்களையும் ஈடுபடச்செய்தனர். லெனின் காட்டிய பாதையில் செல்லும் ரஷ்யா இவ்விதம் தேச ஒற்றுமையை நிலைநாட்டும்பொழுது இலங்கை அரசாங்கம் மட்டும் ஒரு தேசிய இனத்தின் மொழியை அழித்து பிறிதொரு மொழியை அவ்வினத்தின் மீது திணித்து ஒரு மொழியின் கீழ் தேச ஒற்றுமையை நாடுகின்றனர்.

தமது ரஷ்ய விஜயத்தின் அனுபவத்தைப் பற்றித்தொடர்ந்து பேசிய திரு. தர்மலிங்கம், ரஷ்யா உண்மையில் சமாதானத்தை விரும்பியுள்ளதென்றும் அவர்களின் 'சமாதான' கோஷம் வீண் கோஷமல்லவென்றும், ரஷ்ய சமாதானக் கொள்கைக்குச் சான்ருக சீன-இந்திய எல்லைச் சண்டையிலும், கியுபா-அமெரிக்கத் தகராறிலும்ரஷ்யா நடந்துகொண்டவிதத்திலிருந்துநன்கு அறியக் கூடியதாயிருந்தது" என்றும் குறிப்பிட்டார்.

இலங்கைக்குத் தற்போது விஜயஞ்செய்துள்ள சோவியத் பொருளாதார நிபுணர் திரு. சமுசெனகேவ் பேசியதாவது:

லெனின் காட்டிய பாதையில் தீவிரமாக முன்னேறிக் கொண்டிருக்கும் சோவியத் ரஷ்யா, முன்னேற்றமடைந்து கொண்டிருக்கும் சுதந்திர நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்காக உதவிவருகிறது. அவர்கள் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுவிக்கப்பட்டு சுய உரிமையுடன் வாழவேண்டுமென்பதே லெனின் விருப்பம். உலக நாடுகளுள் 20 நாடுகளில் 500 தொழிற்சாலைகளை நிறுவித்தத்தும் பிரச்னைகளைத்தீர்க்க ரஷ்யா உதவி வருகிறது. இலங்கையில் 1965-ல் உற்பத்தி செய்யக் கூடிய உருக்குத்தொழிற்சாலை, 1965-ல் உற்புத்தி செய்யக் கூடியதான மோட்டார் கார் டயர், டியூப் யந்திரசாலை ஆகியனவும் ரஷ்ய உதவியுடன் நிறுவப்படுகின்றன. அத்துடன் கொழும்புக் கோட்டையில் ரஷ்ய உதவியுடன் மாவு ஆலை நிறுவும் திட்டம் தீட்டப்பட்டுவிட்டது. இவற்றினால் வெளியூருக்கு இலங்கையிலிருந்து அநியாயமாகப் போகும் பெரிதளவான பணம் மிஞ்சக் கூடியதாகவும் அவ்விதம் மிச்சப்படுத்தும் பணம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உபயோகப்படுத்தப்படக் கூடியதாயுமிருக்கும்".

டாக்டர் ஆ. நடராசா, திரு. பொ. நாகலிங்கம், மானிப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. வி. கே. கணேசவேல், மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. க. சிவகுரு, திரு. எஸ். ஆர். ஜேக்கப், திரு. வி. பொன்னம்பலம், திரு. கே. நவரத்தினம் ஆகியோரும் பேசினர்.

## ஐயாறன் எழுதுவது

இப்போது ஊரெங்கும் நாடெங்கும் கோடீஸ்வரன் வழக்குத் தீர்ப்பையும், அதை அளித்த நீதிபதி கிரட்ஸரைப் பற்றியும் தான் பேச்சு. அரசாங்கத்துக்கு மாருக இத்தீர்ப்பளித்த மறுநாளே அவருக்கு நீதி அரசர் பதவி கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

அவர் யாழ்ப்பாணத்திலே மாவட்ட நீதிபதியாக இருக்கையில், நாகநாதன் வழக்கில் பொலிஸுக்கு மாருகத் தீர்ப்பளித்தார். அரசாங்கத்துக்கும் பொலிஸுக்கும் மாருகத் தீர்ப்பளித்த அவரது புகழும், இந்நாட்டின் நீதிபரிபாலனத்தின் புகழும் பெரிதும் உயர்ந்துள்ளது.

இது மட்டுமல்ல. இந்தத் தீர்ப்பினுல் அரசாங்கத்துக்கு மறைமுகமாக ஒரு பெரிய நன்மை செய்திருக்கிருர் அவர். தமிழர் பிரச்னையைத் தீர்க்க பிரதமருக்கு நல்லதோர் சந்தர்ப்பத்தையும் அளித்திருக்கின்றார்.

* * *

இந்தத் தீர்ப்பு அரசாங்க காரியாலயங்களிலே வேலை பார்க்கும் தமிழருக்கு வயிற்றில் பால் வார்த்து விட்டது. அவர்கள் புதிய நம்பிக்கையுடன் தலை நிமிர்ந்து நடக்கிருர்களாம். மற்றவர்களுக்கும் அவர்கள் மீது புதிய மதிப்பு ஏற்பட்டுள்ளதாக அறிந்தேன்.

சுப்ரீம் கோர்ட்டுக்கும் பிரிவிகவுன்ஸிலுக்கும் அரசாங்கம் அப்பீல் செய்யுமா? பிரிவிக் கவுன்ஸிலும் இந்தத் தீர்ப்பை அசைக்க முடியாதென்று நம்புகிருர், கோடீஸ்வரனுக்காக வாதித்த வழக்கறிஞர் திருச்செல்வம்.

தனிச் சிங்களச் சட்டத்தின் மீதுகட்டிய கோட்டையெல்லாம் சரிந்து, விழுவதாக இருக்கின்றது. பாவம்! வெளிமலையரும் அவரைச் சேர்ந்தவர்களும் என்ன நினைக்கின்ருர்களோ!

* * *

மொழி காரணமாக வேலையிலிருந்து விலக நேரிட்ட ஓர் அன்பர் மீண்டும், காலஅளவு நீடிக்கப்பட்டதால் வேலைக்கு அமர்த்தப்பட்டார். சிங்களப் பரீட்சைக்கு எழுத ஒப்புக் கொண்டு அவர் கையெழுத்திட்டாராம். ஆனால் சிங்களமோ சரிவரத் தெரியாது. மன நிம்மதியுமில்லை. பின்னர் என்ன செய்வதென்று தெரியாமல், சுவாமியிடம் பூப் போட்டுப் பார்த்தாராம். பரீட்சை எழுத வேண்டாமென்று உத்தரவு வந்தது. பின்னர் தமது பெயரை அடிக்கும்படி கூறிவிட்டதாயும், இப்போது கோடீஸ்வரன் வழக்கு தீர்ப்பைக் கேட்டதும் தமக்குச் சரியான வழியைத் தெய்வம் காட்டியதாயும் அந்த அன்பர் தெரிவித்தார்.

அரசாங்க எழுதுவினைஞர்களில் பலர் சிங்களப் பரீட்சை எழுத ஒப்புக்கொண்டுவிட்டதுபற்றி அவர்களில் ஒருவர் வருத்தப்பட்டார், இத்தீர்ப்பு முன்னமே வந்திருந்தால் அவர் கையெழுத்திட்டிருக்க மாட்டாராம்! பரவாயில்லை. இனி ஏதோ நல்லபடியாக ஒரு நியாயம் பிறக்கும்தானே!

* * *

தமிழ்த் தாத்தாவான மகாமகோபாத்யாய டாக்டர் சுவாமிநாதையரால் பாடப்பெற்ற கொழும்புத் துறை கோவிலைப்பற்றி நேற்று வழிப்போக்கன் எழுதியிருந்தாரல்லவா? அக்கோயில் கும்பாபிஷேகம் வருகிற வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

ஓரன்பரின் அழைப்பின் மீது அக்கோவிலுக்குச் சென்று தரிசித்தேன். பழநியிலுள்ள அசல் அதே மூர்த்திதான்!

பூவைசிய சமூகத்தைச் சேர்ந்த செல்வந்தரான குமார

(5-ம் பக்கம்பார்க்க)

# இந்திய அரசியல் சட்ட 18-வது திருத்த மசோதா

## சுப்ரீம்கோர்ட் வழக்கறிஞர்கள் எதிர்ப்பு

புதுடில்லி, ஏப்ரல் 29

தற்போது பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அரசியல் சட்ட (18-வது) திருத்த மசோதா பற்றி அரசாங்கம் புனராலோசனை செய்ய வேண்டும் என சுப்ரீம் கோர்ட் வழக்கறிஞர்கள் பிரதமர் நேருவைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அவசர நிலைமை பிரகடனம் அமுலிலுள்ள காலத்தில் சில ஜீவாதார உரிமைகளை நிறுத்தி வைப்பது இம்மசோதாவின் நோக்கமாகும்.

பிரதமர் நேருவுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் 67 சுப்ரீம் கோர்ட் வழக்கறிஞர்கள் கைச்சாத்திட்டிருக்கிறார்கள். வழக்கறிஞர்களின் பிரதிநிதிகள் கொண்ட கோஷ்டி ஒன்றுக்குப் பேட்டியளிக்க வேண்டும் என்றும் பிரதமரை அவர்கள் கேட்டிருக்கின்றனர்.

மாஜி அட்டோர்ணி ஜெனரல் திரு. எம். ஸி. செதல்வாட் இந்தக் கோஷ்டிக்கு தலைமை வகித்துச் செல்லக் கூடும்.

## ஆயுர்வேதத்தில் 4 ஆண்டு டிப்ளோமா

திருவனந்தபுரம், ஏ. 27

தென்னிந்தியாவில் ஆயுர்வேதம் நன்கு வளர்ச்சியடைந்திருப்பதால் 4 ஆண்டு டிப்ளோமா பரீட்சைப்படிப்புக்கு ஏற்பாடு செய்வதென தமிழ்நாடு, கேரளம், மைசூர் சுகாதார மந்திரிகள் தீர்மானித்திருக்கிறார்கள்.

—

## முதன் மந்திரிகள் மகாநாடு

கல்கத்தா, ஏப். 27

மேற்கு வங்காளம், திரிபுரா, உத்தர பிரதேசம், அஸ்ஸாம் ஆகிய ராஜ்யங்களின் முதன் மந்திரிகள் அகதிகள் பிரச்னை பற்றி ஆராய்ந்தார்கள். இது சம்பந்தமான சகல அம்சங்களும் ஆராயப்பட்டது என மேற்கு வங்க முதன் மந்திரி திரு. பி. ஸி. சென் கூறினார்.

பிரி. கயானாவில்

## நீக்ரோ-இந்தியர் மோதல்

ஜார்ஜ்டவுன், ஏப்ரல் 27.

இங்கு நீக்ரோக்களுக்கும், இந்தியர்களுக்குமிடையே கலவரம் ஏற்பட்டிருக்கிறது. கடந்த புதன் கிழமை ஏற்பட்ட மோதலில் 2 இந்தியர்களும் 1 நீக்ரோவும் உயிரிழந்தனர். ஒரு இந்தியர் பொலிசாரால் அடித்துக்கொல்லப்பட்டார்.

—

## கென்யா வெற்றி

புதுடில்லி, ஏப். 27

இந்தியாவுக்கும் கென்யாவுக்குமிடையே நடைபெற்ற 5-வது இறுதி ஹாக்கிப் போட்டியில் கென்யா 3-0 கோல்களால் வெற்றி பெற்றது.

இதுவரை நடைபெற்ற 5 போட்டிகளிலும் இந்தியா இரண்டிலும், கென்யா இரண்டிலும் வெற்றிபெற்றிருக்கின்றன. ஒரு ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

—

## விநோபாஜியிடம் நேரு யோசனை கேட்பார்

புதுடில்லி, ஏப்ரல் 27

சில முக்கியமான பிரச்னைகள் பற்றியும், காஷ்மீரில் வகுப்பு சௌஜன்யத்தை நிலைநிறுத்துவதற்கான வழிகள் பற்றியும் விநோபாஜியிடம் நேரு யோசனை கேட்பார் என்று தெரிகிறது. நேரு, ஷேக் அப்துல்லா இருவருக்கும் விநோபாஜியிடம் ரொம்பவும் மதிப்புண்டு. அவருடைய யோசனை தற்சமயம் உதவிகரமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

—

## நிகோதீன தண்டனை குறையும்

சைகோன், ஏப்ரல் 27

காலம் சென்ற தென் வியட்நாம் ஜனாதிபதி டின்டியமின் சகோதரர் நிகோதீன், தனக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையைச் சிறைத் தண்டனையாகக் குறைக்க வேண்டும் எனக் கோரியுள்ளார். அவர் மிகவும் நோய்வாய்ப்பட்டிருப்பதைக் கருதி அவருடைய கோரிக்கை ஏற்கப்படலாம் எனக் கருதப்படுகிறது.

நிகோ குடும்பத்தின் நெருங்கிய நண்பரான நியூயோர்க் ஆர்ச்பிஷப் கார்டினல்ஸ் பெர்மன் நிகோவுக்குத் தயவு காட்டக் கோரி முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதாக சைகோன் பத்திரிகைகள் கூறின.

# காமன்வெல்த் பிரதமமந்திரிகள் மகாநாடு

## தென்ரொடீஷியாவை அழைக்க கானா எதிர்ப்பு

ஆக்ரா, ஏப்ரல் 27

ஜூலை மாதம் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டுக்கு, தென் ரொடீஷியப் பிரதம மந்திரி திரு. அயன்ஸ்மித் அழைக்கப்பட்டிருப்பதைத் தாம் எதிர்த்திருப்பதாக கானா ஜனாதிபதி நிக்ருமா அறிக்கையொன்றில் கூறியிருக்கிறார்.

ஸ்மித்தை அழைக்கும் யோசனைக்குச் சட்டத்தில் அடிப்படை கிடையாது என்றும் அவர் கூறுகிறார்.

தென்ரொடீஷியாவுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது குறித்து அபிப்பிராயம் எதையும் தெரிவிக்க டில்லி உத்தியோக வட்டாரங்கள் தயங்கிய போதிலும் தென்ரொடீஷியா மகாநாட்டில் கலந்துகொள்வதை இந்தியா எதிர்க்கும் எனத் தெரிகிறது.

## நூவுக்கு சமாதானம் வேண்டாம்

பீகிங், ஏப்ரல் 27

எல்லைத்தகராறுகளை சமாதானப்பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற திரு. குருஷ்சேவின் யோசனையை சீனப் பிரதமர் சூ-என்-லாய் நிராகரித்தார்.

—

## கரன்சிங்

புதுடில்லி, ஏப். 27

காஷ்மீர் மன்னர் கரன்சிங் பிரதமர் நேருவையும் திரு. சாஸ்திரி, திரு. நந்தா ஆகிய மந்திரிகளையும் சந்தித்துப் பேசினர்.

# “பண்பில் உயர்ந்தவர்கள் என்ற கர்வம் கூடாது”

## வகுப்புக் கலவரம்பற்றி ஜயப்பிரகாஷ் கூட்டறிக்கை

புதுடில்லி, ஏப். 27

ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் உள்ளிட்டுப் பல சர்வோதயத் தலைவர்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கை ஒன்றில் வகுப்புக் கலவரங்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இரு நாடுகளிலும் வகுப்புக் கலவரங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதைக் குறிப்பிட்ட அவர்கள் “நாம் மிகத் தூய்மையானவர்கள் என்றும், பாகிஸ்தான் தரப்பினர் பண்பு இல்லாதவர்கள் என்றும் நினைக்கக்கூடாது எனக் கூறியிருக்கின்றனர்.

“பண்பில் உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற நிலையைக் கொள்ளாமல், நேர்மையுடன் நமது குறைகளை உணர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் நம்மை உலகம் அதிகமாக மதிக்கும்.

பாகிஸ்தானில் அதிகச் சம்பவங்கள் ஏற்படதால் இந்தியாவில் ஏற்பட்ட எதிரொலி சரியே என மதிப்பிடக் கூடாது” என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

—

## கல்வி மந்திரியின் மகாநாடு

புதுடில்லி, ஏப். 27

டில்லியில் கூடிய 2 நாள் கல்வி மந்திரிகள் மகாநாடு முக்கிய கல்வித் திட்டங்களை மத்திய அரசாங்கம் ஏற்று அவற்றுக்கு முழு நிதி உதவி வழங்கவேண்டும் எனத் தீர்மானித்தது.

ரஷ்யா கல்வி மந்திரிகளின் இம்மகாநாட்டுக்கு மத்திய கல்வி மந்திரி திரு. எம். ஸி. சாக்ளா தலைமை வகித்தார்.

மத்திய அரசாங்கம் வருமானத்தில் 10 சத விகிதத்தையும் ராஜ்ய அரசாங்கங்கள் தலா 20% சத விகிதத்தையும் கல்விக்காக ஒதுக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

—

## அகதிகள்

புவனேஸ்வரம், ஏப். 27

ஒரிஸாவில் இரண்டரை கோடி ரூபா செலவில் அகதிகளுக்கான சிறு தொழில் திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 11000 பௌத்த அகதிகள் கச்சார் ஜில்லாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

## துங்குவுக்கு 125 ஸ்தானங்கள்

கோலாலம்பூர், ஏப். 27

மலேஷிய பார்லிமெண்டில் மலேஷியாவுக்கான ஸ்தானங்கள் 104ல் பிரதமர் துங்கு ரஹ்மானின் ஆளும் கட்சிக்கு 89 ஸ்தானங்கள் கிடைத்துள்ளன. ஸரவாக், சிங்கப்பூர், போர்னியோ ஆகிய இடங்களின் கிடைத்த 36 ஸ்தானங்களையும் சேர்த்து மொத்தம் 125 ஸ்தானங்களை அலயன்ஸ் கட்சி கைப்பற்றியுள்ளது.

பயங்கரவாதிகளின் நாசவேலைகளைச் சமாளிப்பதே தமது பிரச்னை என வெற்றி பெற்ற துங்கு கூறினர்.

—

## தென்னிந்தியாவில் பார்லிமெண்ட் கூட்டம்

### தனிநபர் மசோதா தாக்கல்

புதுடில்லி, ஏப்ரல் 27

வருடத்திற்கு ஒரு தடவை ஹைதராபாத்திலோ அல்லது பெங்களூரிலோ பார்லிமெண்ட் கூடவேண்டும் என்று கூறும் அரசியல் சட்டத் திருத்த மசோதா ஒன்றை திரு. பிரகாஷ்வீர் சாஸ்திரி (சுயேச்சை) லோக சபையில் தாக்கல்செய்தார்.

வட இந்திய மக்களுக்கும் தென்னிந்திய மக்களுக்குமிடையே இன்னும் நெருக்கமான ஒருமைப்பாட்டை வளர்ப்பதே இம்மசோதாவின் நோக்கம் என இதனுடன் இணைந்துள்ள அறிக்கையொன்றில் அவர் கூறியிருக்கிறார்.

ராஜ்ய மந்திரிகளோ அல்லது மத்திய மந்திரிகளோ மறுபடியும் தேர்தலுக்கு நிற்க விரும்பும் பட்சத்தில் பொதுத் தேர்தலுக்கு 6 மாதங்களுக்கு முன்பே ராஜினாமாச் செய்துவிட வேண்டும் எனக் கோரும் தனிநபர் மசோதாவையும் அவர் தாக்கல் செய்தார்.

—

## மலாயாவுக்கு மதுரை மலர்

சென்னை, ஏப்ரல். 27

மலேயாவில் மலர்களுக்கு மிகுந்த கிராக்கி இருப்பதாய் மதுரையிலிருந்து மலர்களை விமானமூலம் அனுப்பலாம் என்றும், இரண்டுமணி நேரத்தில் மலர்கள் அங்கு போய்ச் சேர்ந்துவிடும் என்றும் மந்திரி வெங்கட்ராமன் கூறினர்.

—

## “நயா பைசா” பைசாவாகும்

புதுடில்லி, ஏப்ரல் 27

ஜூன் மாதம் 1-ம் திகதி முதல் “நயா பைசா” என்ற பெயர் மறைந்து விடும். இந்திய நாணயங்கள் அதன்பின் “பைசா” என்றே அழைக்கப்படும். இதற்கான மசோதா ஒன்றை நிதிஇலாகா உதவி மந்திரி ஸ்ரீமதி தாரகேஸ்வரி சின்ஹா லோகசபையில் பிரேரித்தார்,

—

## அமெரிக்கவிஞ்ஞான திரைப்பட விழா

கொழும்பு, திங்கள்

அமெரிக்க விஞ்ஞான திரைப்பட விழா இன்று கொழும்பு ரோயல் கல்லூரியில் ஆரம்பமாகும். இந்த விழாவை செனட் சபைத் தலைவர் தோமஸ் அமரசூரியா ஆரம்பித்து வைப்பார்.

யாழ்ப்பாணத்தில் அடுத்த மாதம் 4-ம் திகதி இந்த விழா நடைபெறும்.

—

## திரைப்பட விழா

புதுடில்லி, ஏப். 27

சர்வதேச திரைப்பட விழா புதுடில்லியில் நடைபெறவிருக்கிறது.

# “நிஸாமின் நியாயமான வாரிசு நானே!”

## இந்திய அரசாங்கத்துக்கு பேரார் இளவரசர் மகஜர்

புதுடில்லி, ஏப். 27

பேரார் இளவரசரும் ஹைதராபாத் நிஸாம் மன்னரின் மூத்த புதல்வருமான ஆஸம்ஜா தமது தந்தையின் வாரிசாக தன்னை நியமிக்காமல் தனது புதல்வரான முகரம்ஜா இளவரசரை இந்திய அரசாங்கம் அங்கீகரித்தது குறித்து ஆட்சேபனை தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

இந்திய அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் மன்னரின் மூத்த புதல்வரே அவரது வாரிசாக நியமிக்கப்பட வேண்டும் என்பது வழக்கம் என பேரார் இளவரசர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

“ஹைதராபாத் சமஸ்தானம் இந்தியாவுடன் இணைக்கப்பட்ட பின்பும்கூட எனது தந்தை என்னையே வாரிசாகக் குறிப்பிட்டார்” என்றும் அவர் தன் மகஜரில் கூறுகிறார்.

உலகிலேயே மிகப் பெரும் பணக்காரர் எனக் கூறப்படும் 79 வயதான நிஸாம் கேம்பிரிட்ஜில் கல்வி கற்ற தனது பேரர் முகரம்ஜா இளவரசரை வாரிசாக நியமித்திருக்கிறார். ரூபா 300 கோடிக்கு மேல் மதிப்புள்ள நிஸாமின் சொத்தை நிஸாமுக்குப்பின் அவரது பேரரே பரிபாலித்து வருவார். இந்தச் சொத்துக்கள் தவிர கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான வைரங்களும் இதர விலைமதிப்பற்ற பொக்கிஷங்களும் நிஸாமிடம் இருக்கின்றன. இதுதவிர வருடம் ஒன்றுக்கு இந்திய அரசாங்கம் அவருக்கு ரூ 50 லட்சம் பென்ஷன் அளிக்கிறது.

—

## டாங்கே

பம்பாய், ஏப். 27

இந்திய கம்யூனிஸ்ட்கட்சியில் தலையிடாதிருக்குமாறு திரு. டாங்கேசீனாவுக்கு அறிவுறுத்தியிருக்கிறார்.

—

## வேலைக்கு திரும்பினர்

கொழும்பு, திங்கள்

கடந்த சனிக்கிழமை வேலைநிறுத்தம் செய்த கொழும்பு மாநகர சபை தொழிலாளர்கள் இன்று வேலைக்குத்திரும்பியுள்ளார்கள்.

மேயரால் வெளியிடப்பட்ட ஒரு கட்டளையின் காரணமாகவே இவ் வேலை நிறுத்தம் நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

## போர்த்தேங்காய் அடிப்போட்டி

பளை, ஞாயிறு

சித்திராபூரணை தினத்தன்று பளை வாலிப ஐக்கிய முன்னணிக் கோஷ்டிக்கும் அல்லிப்பளைக் கோஷ்டிக்குமிடையே பளை வைரவர் கோவில் மைதானத்தில் நடைபெற்ற போர்த்தேங்காய் அடிப்போட்டியில் பளை வாலிப ஐக்கிய முன்னணிக் கோஷ்டி முப்பத்தாறு தேங்காய்களால் வெற்றி ஈட்டியது. திரு. சேனாதிராசா, செல்வராசா வாலிப ஐக்கிய முன்னணிக் கோஷ்டியில் வெற்றிபெற்றவராவர் திரு. சி. பொன்னையா தலைமையிலும் திரு. எஸ். செல்வராசா தலைமையிலும் நடைபெற்ற போட்டிக்குத் திரு. சே. சேதுகாவலர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

—

## எகலியக்கொடை இந்து வளர்ச்சிக் கழகம்

எகலியகொடை திங்கள்

எகலியக்கொடை இந்து வளர்ச்சிக் கழக ஆரம்பகூட்டம் சென்ற புதன்கிழமை கழக அரங்கத்தில் நடைபெற்றது. எகலியக்கொடையில் இந்து ஆலயம் அமைத்தல் பற்றி ஆராயப்பட்டு இதற்கென ஓர் விசேட குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. நடப்பு வருடத்திற்கு கீழ்வருவோர் உத்தியோகஸ்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: டாக்டர் அ. வைத்திலிங்கம், உபதலைவர்கள்: திருவாளர்கள் கே. சேனாதிராசா, எஸ். ரி. கந்தையா, காரியதரிசிகள்: திருவாளர்கள் த. சண்முகலிங்கம், வி எஸ். கந்தையா. தனாதிகாரி: திரு. எஸ். இராசரத்தினம்.

—

## மந்திரிக்கு பாராட்டு

கொழும்பு, திங்கள்

காணி மந்திரி திரு. சி. பி. டி, சில்வா நாட்டை முன்னேற்றுவதற்கு அதிக அக்கறை எடுத்து வருகிறாரென்றும், விவசாயிகளுக்கு உதவி செய்ய அவர் என்றும்தயாராக இருக்கிறார் என்றும் கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா நீர்ப்பாசனத் திட்டமொன்றுக்கு அடிக்கல் நாட்டி பேசும்போது கூறினர்

## வானொலி

– அ. கனகசூரியர் –

நாம் உலகின் பல கோணங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளையெல்லாம், உடனுக்குடன் அறிவதற்குத் துணையான கருவி வானொலி. மக்கள் காலையில் எழுந்ததும், அவர்களுக்கு வணக்கம் கூறி தனது வாழ்க்கையை ஆரம்பிக்கின்றது அது.

பொதுவாக வானொலி பல இடங்களில் மக்களை மகிழ்விக்கின்றது. நாம் வானொலியில் இருந்து நிகழ்ச்சிகளை எவ்வாறு கேட்கிறோம் என்பதை ஆராய்ந்து பார்க்குமிடத்து ஒலி அலைகள் மின் அலைகளாகி ஆகாயத்தின் மூலம் வருகின்றன என்பது தெரியவருகின்றது. எமது நாட்டில் வானொலி நிலையம் அரசாங்கத்தின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றது. நாட்டில் கலை, இலக்கியம், சமயம், அரசியல், விஞ்ஞானம் ஆகியவற்றை முன்னேற்றுவதில் வானொலி நிலையத்தார் பெருந்தொண்டு புரிகின்றனர். வானொலியைக் கண்டுபிடித்த 'மார்க்கோனி' இத்தாலி தேசத்தைச் சேர்ந்தவர். இவரின் முயற்சியால் 1895-ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட வானொலி, இருந்த இடத்தில் இருந்து நிகழ்ச்சிகளை அறிய ஒரு வரப் பிரசாதமாக விளங்குகிறது.

---



# மாணவர் மலர்



# விசித்திர மனிதன்!

மகான்

228 இலக்கத்துக்கு டயல் செய்த ஷகான் டெலிபோன் றிஸீவரை காதில் வைத்து மறுமுனையிலிருந்த நபருடன் எதையோ கதைத்தார். அவர்களிருவரின் டெலிபோன் பேச்சுகள் நான்கு நிமிடநேரம் வரை நீடித்தன. அவர் எண்ணியது நிறைவேறிவிட்டது! எதிர்பார்த்தது நிகழ்ந்துவிட்டது. ஷகானுடன் டெலிபோனில் மறுமுனையிலிருந்து பேசிய குரல்...ஒரு பெண்ணினுடையது.

பத்து நிமிடங்களாகியும் அருளப்பன் வராததுகண்டு சிறிது கலவரமடைந்தஷகான், அந்த வீட்டிலிருந்த பத்து வயதுச் சிறுவனை அழைத்து அவனது அம்மாவை வரும்படி கூறினார். ஒருசில நிமிட நேரத்துக்குள் சுமார் நாற்பதுவயது மதிப்பிடத்தக்க ஒரு அம்மணி அங்கு வந்தார். ஆறுதலாகவும் அமைதியாகவும் அவருடன் கதைத்த ஷகான் தமக்குத் தேவையான சிலதகவல்களை சேகரித்துக் கொண்டார். திரு. அருளப்பனுடன் அதிக காலமாக அந்த அம்மணி இருந்தால் ஷகானுக்குத் தெரியாத ஆனால் தெரியக்கூடிய சில தகவல்களை அந்த அம்மணிவெளியிட்டிருந்தார். அவர்களிடையே நடைபெற்ற பேச்சுகளில் சில முக்கியமான விஷயங்களுமிருந்தன. கொலைசெய்யப்பட்ட சங்கரலிங்கம்பிள்ளை, இருதினங்களுக்கு முன்னர் மாண்ட சோமன்பற்றியும் அந்த அம்மணி குறிப்பிட்டிருந்தார். ஆனால் அவர்களிருவரின் மரணம்பற்றி தமக்கு எதுவும் தெரியாதென்று அவர் சொல்லிவிட்டார்.

சுமார் பதினைந்துநிமிடநேரம் வரை அங்கிருந்த ஷகான், அருளப்பனைக் காணாது பொறுமையையும் இழந்து அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டார். அவரின் கார் சங்கரலிங்கம்பிள்ளையின் குடும்ப வழக்கறிஞர் நடேசன் வீட்டின் முன் நின்றது. நல்லகாலமாக வழக்கறிஞர் நடேசன் எங்கேயும் செல்லாமல் அங்கே வீட்டிலே இருந்தார்.

"வணக்கம். வாருங்கள்" என்று வரவேற்றார் வழக்கறிஞர் நடேசன். இருவரும் பல முக்கியமான பேச்சுகள் குறித்து ஆலோசனை நடத்தினர். காலம்சென்ற சங்கரலிங்கம்பிள்ளையின் குடும்ப வழக்கறிஞராக விளங்கிய அவர் ஷகானுக்குத் தேவையான பல விபரங்களையும் விளக்கமாக எடுத்துக் கூறினார். ஆனால் சங்கரலிங்கம்பிள்ளை சோமனின் கொலைகள்பற்றி எந்தவிதக் கருத்துமோ அல்லது தகவல்களோ அவர் வெளியிடவில்லை. "ராஜனுக்கும் சோமனுக்கும் சங்கரலிங்கம்பிள்ளை எவ்வளவு சொத்துக்கள் எழுதி வைத்திருந்தார்?" என்று ஷகான் ஒரு தடவை கேட்டதற்கு வழக்கறிஞர் நடேசன் விபரமாகப் பதில் கூறினார்.

"பொதுவாக இருவருக்கும் ஒரே அளவான சொத்துக்களையே அவர் எழுதி வைத்திருக்கிறார். ஆனால் பணம் சம்பந்தமாக சோமனுக்கே அதிக சொத்து இருக்கிறது" என்று கூறினார் நடேசன். "இவ்வளவு விரைவாகவே அவர் ஏன் சொத்துக்களை எழுதி வைத்தார்?" என்று ஷகான் கேட்கவெ நடேசன், "அவரின் மனதில் எதுவும் தோன்றியிருக்கலாம்" என்று பதிலளித்தார். "இந்தச் சொத்துக்களை ராஜனும் சோமனும் அனுபவிக்கலாம்தானே?" என்று ஷகான் கேட்டதும்...

"அதுதான் முடியாது. ராஜன் சொத்தை அவர் விருப்பப்படி அனுபவிக்க உரிமை இருக்கிறது. ஆனால் சோமனின் சொத்தை திரு. சங்கரலிங்கம்பிள்ளை இறந்த பின்னர்தான் சோமனின் படிப்பு வசதிகளுக்கும் அவனை ஒரு பெரிய மனிதனாக்குவதற்குமே பயன்படுத்த வகைசெய்யப்பட்டிருக்கிறது" என்றார் நடேசன். "அப்படியென்றால் என்ன நிகழப்போகிறது என்பதை சங்கரலிங்கம்பிள்ளை முன்கூட்டியே தெரிந்து வைத்திருந்தார் என்று சொல்லுங்கள்..." என்று கேட்டார் ஷகான். இதற்கு வழக்கறிஞர் நடேசன் வாய்திறந்து எதுவும் பேசவில்லை! சிலநிமிடம் கழித்து...

"ஆமா...ராஜன் இங்கு வந்தாரா?" என்று ஒரு புதிரை வெளியிட்டார் ஷகான். நடேசன் "ஆம்" என்று தலையசைத்தார். ஷகானுக்கு இதைவிடப் பலமுக்கியமான வேலைகளிருந்ததால்... "வசதிப்பட்டால் மற்றுமொரு தடவை சந்திக்கிறேன்" என்றுசொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார் ஷகான்.

## 5

ஷகானின் வீடு. நேரம்: மாலை ஐந்து மணி. ஷகானின் வீட்டுக்கு முன் வந்துநின்ற காரிலிருந்து இறங்கி அவசரம் அவசரமாக ஓடிவந்து கொண்டிருந்தார் ராஜன். ராஜனின் பதற்றமான நிலையைக் கண்டு சிறிது பயமுற்ற ஷகான், வீட்டு ஹோலுக்குள்ளிருந்து எழுந்து வீட்டு வாசலுக்குச் சென்று ராஜனை வரவேற்று... "என்ன இப்படி அவசரம்...? தேவிகாவுக்கு ஏதுவும்...?" என்று கேட்டார். "இல்லை ஸார் இப்பொழுதுதான் இந்த அவசரத் தந்தி வந்தது" என்று சொல்லி ஒரு தந்தியை ஷகானிடம் நீட்டினார் ராஜன். அதில்... "என்னைக் கைது செய்துவிட்டார்கள். உடன் வந்து என்னைக் காப்பாற்று" என்றிருந்தது. அத்தந்தியை யார் அனுப்பினார்கள் என்று கவனித்தார் ஷகான். அனுப்பியவரின் பெயர்......சிங்காரவேலு என்றிருந்தது. அப்படியானல் ...சிங்கப்பூரில் இருக்கும் ராஜனின் மாமா சிங்காரவேலுதான் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

★

ராஜனும் ஷகானும் ஹோலுக்குள் இருந்தபொழுது அங்கிருந்த டெலிபோன் அலறியது. ஷகான் எழுந்து சென்று டெலிபோன் றிஸீவரை காதில் வைத்து ஹலோ என்றார். "நீங்கள் சொன்ன மாதிரி எல்லாம் சக்ஸஸ்ஸாகி விட்டது. இனியாவது சொல்லித் தொலையுங்களேன். அந்தக் கொலைகாரர் யார் என்று..." என்று டெலிபோனில் பேசினார் இன்ஸ்பெக்டர் பிரான்சிஸ்.

"அவசரப்படாதீர்கள் இன்ஸ்பெக்டர். கொலைகாரன் தப்ப மாட்டான். நான் போட்ட திட்டம் சரியாகி விட்டது. கொலைகாரன் யார் என்பது விடிந்தால் தெரியும்" என்றார் ஷகான். அதனைத் தொடர்ந்து டெலிபோன் றிஸீவர் வைக்கப்படும் "கிளிக்" சத்தம் கேட்டது.

(அடுத்த இதழில் முடியும்)

---

## தமிழ்ப்புலவர்

# எம்பெருமான் புலவர்

– ச. சிவராஜசிங்கம் –

பெரும்புகழ்படைத்த கொங்குமா நாட்டிலே சங்ககிரி தூர்க்கம் என்னும் ஊரில் ஏறக்குறைய முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் எம்பெருமான் புலவர் தோன்றினர்.

இவர் பள்ளிக் கல்வியும், புலமைக் கல்வியும் கற்று சீரும் சிறப்பும் பெற்று அறிஞரானார். இவர் தெய்வ பக்தி நிறைந்தவர். மதுரையை மாண்புற ஆட்சிசெய்த பாண்டிய மன்னன் ஒருவனுடைய அவைக்களப் புலவராக வீற்றிருந்தார். பூங்கோதை என்னும் நல்லியல்பு கொண்ட பண்புள்ள மாதொருத்தியை மணந்து நல்லற வாழ்வு வாழ்ந்து வந்தார்.

பூந்துறை நாட்டு மன்னனான மோரூரில் நல்லதம்பிக் காங்கேயன் என்பவனுடைய நட்பு இவருக்குக் கிடைத்தது. இவர் அவன் வேண்டுகோளுக்கிணங்க தக்கை இராமாயணம் என்னும் புதிய ராமாயணத்தைப் பாடியுள்ளார்.

இந்நூல் சங்ககிரி வரதராசப் பெருமான் திருமுன்பு அரங்கேற்றம் செய்யப்பட்டது.

---

## உங்களுக்குத் தெரியுமா?

— ஐங்கரன் —

இலங்கையில் ஆங்கில ஆட்சி 1796-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15-ம் திகதி ஆரம்பமானது.

இலங்கையில் முதல் இந்தியத் தூதராகக் கடமையாற்றியவர் திரு. வி. வி. கிரி.

இலங்கைக்கு முதன்முதல் மோட்டார் கார் கொண்டு வரப்பட்டது 1895-ல்.

வில்லியம் ஷேக்ஸ்பியர் இறக்கும்போது அவருடைய வயது 52.

சூரியனின் விட்டம் 864,000 மைல்.

பென்ஸிலினைக் கண்டுபிடித்தவர் திரு. அலெக்ஸாண்டர் பிளெமிங்.

இலங்கையில் முதல் ஆகாய விமானம் 1911-ம் ஆண்டு டிசம்பர் மாதம் காணப்பட்டது.

---

## பொதுமேடை

'தமிழ்ப் புலவர்கள்' வரிசையில் வரும் கட்டுரைகள் மாணவருக்கு மாத்திரமின்றி அனைவருக்குமே பயனளிக்கக் கூடியதாக இருக்கிறது. தமிழை வளர்த்த ஒவ்வொரு புலவரையும் பற்றி அறியாதவர்களும் இக்கட்டுரை மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. உலகிற்கு முதன் முதல் தமிழ் மொழியைக் கற்பித்தமையால் தமிழை வளர்த்த பெரியார்களில் அகத்தியரே முதலிடம் பெறுவார். எனவே அகத்திய முனிவரைப் பற்றி கட்டுரையின் முதலில் எழுதியிருந்தால் நல்லதல்லவா? மற்றும் சிறந்த புலவர்களென்று பாரதியார் புகழ்ந்த திருவள்ளுவர், கம்பர், இளங்கோ அவர்களையும் பற்றிக் குறிப்பிடுவது சிறந்தது.

- ஆ. சிவயோகம்.
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

---

# விஞ்ஞானத்தின் முன்னேற்றம்

—தி. புருஷோத்தமன்—

குற்றவாளியைப் பிடிக்க இப்பொழுது பொதுவாக விரலடையாளமேஏற்ற சாட்சியமாக இருந்துவருகிறது. குற்றங்கள் நவீன சாதனங்களால் நன்கு நிரூபிக்கப்படவேண்டுமென்பதற்காக 'போரென்சிக் லாபரெட்டரி' என்ற பெயருடன் உலக நாடுகளில் அநேகமாக ஆராய்ச்சிச்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன. ஒரு திருடன் திருடப்போகுமிடத்தில் தன் கைக்குட்டையைத் தவறவிட்டுவிட்டானானல் அதிலுள்ள வண்ணான் குறி அழிந்துபோய்விட்டால் அந்தக் கைக்குட்டையை 'அல்டிராவயிலட்' கிரணம் மூலமாகப் பார்த்தால் அந்த வண்ணான் குறி பளிச்செனத் தெரியும். அழிக்கப்பட்ட குறியை இதன்மூலமாக வாசிக்கலாம். ஒரு கார் ஒருவனை மோதிவிட்டு ஓடிவிட்டதானல் அவ்விடத்தில் காணக்கூடிய காரின் வர்ணத்துகள்களைக் கொண்டு அக்காரைப் பற்றி அறியலாம். இதற்கு 'ஸ்பெக்ட்ராஸ்கோப்' என்ற கருவி உபயோகமாகிறது. இவைகளையெல்லாம்விட அதிசயமான துப்பறியும் கருவி ஒன்றிருக்கிறது. ஒருவன் பொய்சொல்வதை அறிய உதவும் இக்கருவியின் பெயர் 'லைடிடெக்டர்'. குற்றம் செய்ததாகச் சந்தேகிக்கும் மனிதனை நாற்காலியில் இருக்கவைத்து அவன் மீது அக்கருவியைப் பொருத்துகிறார்கள். பிறகு அவனிடம் குற்றம் சம்பந்தமான கேள்வி கேட்பார்கள். அவன் பொய்சொல்லும்போது அவனது இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு, மூச்சுவிடுதல் ஆகியவை பாதிக்கப்படும். உண்மை சொல்லும்போது சரியான அளவுடையதாய் இருக்கும். இந்த யந்திரம் இம்மாறுதல்களுக்கு ஏற்ப 'கிராப்' (வரைபடம்) வரையும். இதை ஆராய்ந்து பொய், உண்மைகளைக் கண்டு பிடிக்கலாம். இந்த இயந்திரத்தின் சாட்சியத்தை அமெரிக்காவே ஏற்றுக்கொள்கின்றது. பிரிட்டன் முதலியன முழு மனதோடு ஏற்றுக்கொள்வதில்லை. இப்படி எத்தனையோ சாதனங்கள் நவீன உலகில் பயன்படுகின்றன!

---

## எம். பி. யின் திருமணம்

கொழும்பு, திங்கள்

நிவித்திகலை எம். பி. திரு. ஸ்டான்லி மொலிகொடை, இரத்தினபுரியைச் சேர்ந்த செல்வி சுவர்ணவக்குபுவைத் திருமணம் செய்துகொண்டார்.

கடந்த வெள்ளிகிழமை நடைபெற்ற இத்திருமணத்தில் அரசாங்க கட்சியைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.

---

# ஐந்தோ ஐந்து

மா. வரகுகராணி

ஐம்பொறி:- மெய், வாய், கண், மூக்கு, செவி. ஐம்பூதம்:- நிலம், நீர், தீ, வளி, வான்

ஐம்பெருங்காப்பியம்:- சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி. ஐம்பொன்:- பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம். ஐம்பெரும் பாதகம்:- கொலை, களவு, கள், பொய், குருநிந்தை. ஐங்குரவர்:- அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன். ஐந்தங்கம், திதி, வாரம், நாள், யோகம்: கரணம். பஞ்சபாண்டவர்:- தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன். ஐவகை இசைக்கருவி:- தோற்கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி. மிடற்கருவி, நரம்புக்கருவி. பஞ்சகவ்வியம்:- கோசலம், கோமயம், பால், தயிர். நெய், ஐவகை வேள்வி:- தெய்வம், பிரம்மம், பூதம், தென்புலத்தார், விருந்தினர். ஐம்பால்:- முடி, கொண்டை, குழல், பனிச்சை, சுருள். ஐவகைச் சத்தி:- பூகசத்தி, ஆனம சத்தி, திரவியசத்தி, மந்திரசத்தி, இலிங்க சத்தி. ஐந்திலக்கணம்:- எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி. ஐங்கணை:- மாம்பூ, அசோகம்பூ, குவளைப்பூ, முல்லைப்பூ, தாமரைப்பூ.

---

## தாச்சிப்போட்டி

சுழிபுரம், திங்கள்

மூளாய் இளைஞர் கழகத்திற்கும் தொல்புரம் கென்னடி கழகத்திற்குமிடையே நடைபெற்ற தாச்சிப்போட்டியில் மூளாய் இளைஞர் கோஷ்டி வெற்றி பெற்றனர். கென்னடி கோஷ்டி பழம் ஒன்றும் எடுக்கவில்லை. போட்டி வழக்கம்பரை சனமூக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

---

## சண்டிலிப்பாய் கோஷ்டி வெற்றி

சுழிபுரம், திங்கள்

சண்டிலிப்பாய் விளையாட்டுக் கோஷ்டிக்கும் சுழிபுரம் சூட்டிங் ஸ்ராஸ் கோஷ்டிக்குமிடையே சிநேகிதபூர்வமாக நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் முதல் இரண்டு ஆட்டங்களிலும் வெற்றி பெற்றது. போட்டி சண்டிலிப்பாய் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

## வானொலிநிகழ்ச்சிகள்

செவ்வாய் 28-4-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 வைநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை.

இரவு 6-45 ஸ்ரீலங்கா குறுக்கெழுத்துப்போட்டி, 7-15 இருபது கேள்விகள், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 நேயர்விருப்பம், 9-45 நாகஸ்லரம் — வி. குமாரசாமி.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 இசைக்கோவை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்தியஇசை, 1-50 குரல் இசை, 2-10 வி. பி. வேதவியாசராவ் — பாட்டு, 2-40 பொன்ஞெளிர் பாரதம்.

மாலை 5-15 வி பி. வேதவியாசராவ் — பாட்டு.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 இரு உலகம் — நாடகம், 7-45 ஸீதாமணி ஸ்ரீநிவாசன் — பாட்டு, 9-15 நாட்டுப்பாடல்கள், 9-45 அருணகிரிநாதர் — இசை விழா.

## என். எம். கோஷ்டிக்கு கண்டனம்

கொழும்பு, திங்கள்

கூட்டு அரசாங்கம் அமைக்கும் யோசனை சமசமாஜக் கட்சியின் மத்திய கமிட்டியால் நிராகரிக்கப்பட்ட பின்பும், டாக்டர் என். எம். தலைமையிலுள்ள கோஷ்டி, கூட்டு அரசாங்கத்திற்கு முயற்சியெடுப்பதைபட்டு திரு. எட்மண்ட் சமரக்கொடி தலைமையிலுள்ள மத்திய கமிட்டி கோஷ்டியினர் பலத்த கண்டனம் தெரிவித்தனர்.

## டெலிபோன் பாதை பழுதடைந்தது

கொழும்பு, திங்கள்

பொலிஸ் தலைமை நிலையத்திற்குச் செல்லும் இருபது பிரதான டெலிபோன் பாதைகளில் 6 பழுதடைந்து விட்டதாக தபால் இலாகா நேற்று அறிவித்துள்ளது.

## மந்திரிசபையிடம் அறிவிக்கப்படும்

கொழும்பு, திங்கள்

அரசாங்கத்திற்கும் ஐக்கிய இடதுசாரி முன்னணிக்கும் கடந்தவாரம் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பற்றிப் பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்கா, தமது மந்திரிசபைக்கு அறிவிப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இப் பேச்சுவார்த்தைகளில் தீவிரமாகப் பங்கு பற்றிய மந்திரியொருவர் அரசாங்கத்தின் சோஷலிஸக் கொள்கையை விரைவாகச் செயல்படுத்தக்கூடிய விதத்தில் இப் பேச்சுவார்த்தைகள் அமைந்துள்ளதெனத் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகள் அதிக பலனளித்துள்ளதாகவும் அரசியல் பொருளாதாரத் திட்டத்தில் இருசாரருக்கும் ஒற்றுமை ஏற்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து இரு சாராருக்கும் ஒற்றுமை ஏற்படுமென்றும் ஐக்கிய இடதுசாரி முன்னணியைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

ஏப்ரல் 30-ம் திகதி

# இந்திய பாடசாலை மாணவர் கிரிக்கெட் கோஷ்டி

## யாழ். கலப்பு மாணவர் கோஷ்டியுடன் போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

வருகிற ஏப்ரல் 30-ம் திகதியும், மே 1-ம் திகதியும் இந்திய பாடசாலை மாணவர் கிரிக்கெட் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணம் கலப்பு பாடசாலைகள் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே கிரிக்கெட் விளையாட்டுப் போட்டி ஆரம்பமாகவிருக்கிறது.

மத்திய கல்லூரி மைதானத்தில் வியாழக்கிழமை (ஏப்ரல் 30) பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரையும், மறுநாள் வெள்ளிக்கிழமை (மே1) காலை 9 மணி முதல் 1 மணி வரையும், பின் 2 மணி முதல் 6 மணி வரையும் விளையாட்டுப் போட்டி நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாணப் பாடசாலைகளின் கலப்பு கோஷ்டி வீரர்கள் வருமாறு:-

எம். தெய்வேந்திரா (கப்டன்-சென் ஜோன்ஸ் கல்லூரி) ஆர். சச்சிதானந்தன் (உதவி காப்டன்-யாழ். மத்திய கல்லூரி), எம். நடராஜசுந்தரம் (ஹார்ட்லி கல்லூரி), கே விநாயகமூர்த்தி (மகாஜனக் கல்லூரி), பி. கண்ணுத்துரை (சென். ஜோன்ஸ் கல்லூரி), எஸ். எம். மூத்ததம்பி (சென். ஜோன்ஸ் கல்லூரி), ஜே. வைரவப்பிள்ளை (சென். ஜோன்ஸ் கல்லூரி), ஏ. பற்குணராஜா (யாழ்.மத்திய கல்லூரி), எஸ். சோதிலிங்கம் (யாழ். இந்துக் கல்லூரி. கே. சத்தியானந்தன் (யாழ். இந்துக்கல்லூரி), எஸ். மயில்வாகனம் (ஹார்ட்லி கல்லூரி.

மாற்று ஆட்டக்காரர்கள்:

எஸ். ராஜரத்தினம் (ஸ்கந்தவரோதயக கல்லூரி), சண்முகராஜ (சென். பற்றிக்ஸ் கல்லூரி), எஸ். நந்தகுமார் (யாழ். இந்துக்கல்லூரி).

# யாழ்ப்பாணப் பகுதியில் பஹாய் இயக்கக் கிளைகள்

உடுப்பிட்டி, திங்கள்

"உலக ஏட்டிலே இன்று ஒரு புனிதநாள். உலக சமாதானத்தையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவரும் எனக்குஉங்கசந்திப்புள் மிகவும் விரும்பத்தக்கது. நான் ஒரு அமெரிக்கனுலும் இலங்கையின் இயற்கை எழில்வளங்கள் என்னைக் கொள்ளை கொண்டுவிட்டன. எல்லோரும் சமாதானத்துடனும் ஒற்றுமையுடனும் இருக்கவேண்டுமென்பதற்காகவே சர்வதேசிய நீதிமன்றம் பாடுபடுகின்றது."

நெல்லியடி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற பஹாய் இயக்கப் பொதுக்கூட்டத்தில் பிரதம பேச்சாளரான அமெரிக்க இரசாயன இயல் விற்பன்னர் திரு. சலோனர் சூட் மேற்கண்டவாறு கூறினர். சர்வதேசிய உலக மன்றத்திலிருந்து வந்த செய்தியை அவர் வாசித்தார்.

"பஹாய் இயக்க ஸ்தாபகரான பஹாஉல்லாவின் பெயரை இலங்கை மக்கள் அறியும்படி பஹாய் சமூகம் இச்செய்தியைப் பரப்பவேண்டும். தற்போது சர்வதேசிய நீதிமன்றத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒன்பது பேரும் சேர்ந்து ஓர் ஒன்பது வருடத் திட்டத்தை உருவாக்கியுள்ளார்கள். அத்திட்டத்தின்படி பஹாய் அன்பர்கள் வாழும் பகுதியை நூற்றைம்பது ஆகவும் ஸ்தல ஸ்தாபனங்களை ஐம்பது ஆகவும் கூட்டவேண்டும். பாகிஸ்தானின் ஒத்துழைப்புடன் இலங்கையில் ஒரு பெரிய கோவில் கட்டுவதுடன் பஹாய் சமய முக்கிய தினங்களுக்காக அரசாங்கத்திடம் விடுமுறை கேட்கவேண்டும். பஹாய் செய்தி தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்படவேண்டும். கிராமப்புற மக்களுக்கு ஒரேநேரத்தில் இச்செய்தி பரவச்செய்தல்வேண்டும். இவ்வொன்பது வருடத் திட்டம் சிறப்புற கடவுள் அருள்புரிவாராக" என்று அவர் தெரிவித்தார்.

இவரது ஆங்கிலப் பேச்சை திரு. கே. டீ ஈ. ரத்தினம் தமிழில் மொழிபெயர்த்தார். திருவாளர்கள் கே. சிவானந்தவேல், செ. சுவர்ணராசா ஆகியோரும் பேசினர்.

புதுவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. செ. சுவர்ணராசா, செயலாளர்: திரு. க. பேரம்பலம், பொருளாளர்: திரு. எஸ். சண்முகநாதன்.

இதன்பின்னர் வதிரி இரும்பு மதகடி என்னுமிடத்திலும் திரு. சலோனர் சூட் தலைமையில் பஹாய் இயக்கக் கிளை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பின்வருவோர் நடப்புவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. எஸ். கந்தசாமி, செயலாளர்: திரு. எஸ். பசுபதிப்பிள்ளை, பொருளாளர்: எம். ராஜரத்தினம்.

## நாரந்தனை கி. ச. முடிவுகள்

ஊர்காவற்றுறை, திங்கள்

சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்ற நாரந்தனை கிராமசபைத் தேர்தலில் 2-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட திரு வி. சேதுகாவலர் 116 வாக்குகளை அதிகமாகப் பெற்று வெற்றியீட்டினர். 10-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட தற்போதைய தலைவரான திரு. சு. கதிரிதம்பி தோல்வியுற்ருர். 4-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட தற்போதைய அங்கத்தவரான திரு. வே. சதாசிவம் இரண்டு வாக்குகள் குறையப் பெற்று தோல்வியடைந்தார்.

வெற்றிபெற்றவர்கள் விபரம்:-

1-ம் வட்டாரம் திரு. இ. நகுலேசபிள்ளை, 2-ம் வட்டாரம் திரு. வி. சேதுகாவலர், 3-ம் வட்டாரம் தரு. கே. குருசாமி (போட்டியில்லை), 4-ம் வட்டாரம் திரு. சு. கந்தையா, 5-ம் வட்டாரம் திரு. ச. பொன்னுசாமி, 6-ம் வட்டாரம் ரி. தம்பிராசா, 7-ம் வட்டாரம் திரு. நா. த. சிவஞானம் (வழக்கறிஞர்- போட்டியில்லை), 9-ம் வட்டாரம் திரு. ச. அருமைநாதர், 10-ம் வட்டாரம் திரு வி. தியாகராசா, 11-ம் வட்டாரம் திரு. நீக்கிலஸ், 12-ம் வட்டாரம் திரு. ஏ. கனகரத்தினம், 13-ம் வட்டாரம் திரு. சோதிவேல்.

## கி. ச. உபதலைவர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

லங்கா சமசமாஜக்கட்சியைச் சேர்ந்தவரும் தெல்லிப்பழைக் கிராமசபையின் 17-ம் வட்டார அங்கத்தவருமான திரு. மு. முத்துலிங்கம் அக்கிராமசபையின் இவ்வருட உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## ஜூட்டிங் ஸ்டார் நிர்வாகிகள்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் ஜூட்டிங் ஸ்டார் வருடாந்தக் கூட்டம் திரு. க. குகதாசன் தலைமையில் கம்பனையில் நடைபெற்றது. புது வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: சு. கந்தசுவாமி, உப-தலைவர்: செ. சதாசிவநாயகம். காரியதரிசி: இ. சுப்பிரமணியம், உப-காரியதரிசி: த. அருள்நாயகம். தனதிகாரி: சி. கதிர்காமநாதன். எண்பார்வையாளர்: இந்திராசா.

## "உயர்ந்த சிந்தனை வேண்டும்"

### எழுத்தாளருக்கு யோசனை

விளிசிட்டி, திங்கள்

"வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனைய துயர்வு என்பது வள்ளுவன் வாய்மொழி. உள்ளம் உயர்ந்தால் வாழ்வு உயரும். எழுத்தாளர்கள் உயர்ந்த சிந்தனை உள்ளவர்களாக உயர்ந்த லக்ஷியங்களை உருவாக்குபவர்களாக இருக்கவேண்டும். அப்போதுதான் அவர்கள் படைக்கும் இலக்கியங்கள் மனித சமுதாயத்தை உத்தாரணஞ் செய்பவையாக, உயர்த்துபவையாக அமையும்" என்று பண்டிதை அ. தங்கம்மா மல்லாகம பண்டித கலாசாலை இலக்கிய கலாமன்ற ஆண்டு விழாவில் பேசும்போது கூறினர்.

விழாவிலே நிகழ்ந்த கவியரங்கில் கவிஞர்கள் நாவேந்தன், நவீனஜோதி, சண்முகன், ஆலைமணி, ஆடலிறை ஆகியோர் கலந்துகொண்டனர். ஆண்டு மும்முறை கையெழுத்திதழ் "பண்டிதன்" பண்டிதர் க. நாகலிங்கத்தினல் வெளியிடப்பட்டது. புதிய நிர்வாகிகள் தெரிவின் பின் இதழாசிரியர் பி. நடராஜன் நன்றி கூறினர்.

## வவனிக்குள ஆலயக் கட்டிடம்

துணுக்காய், திங்கள்

வவனிக்குளம் சிவன்கோவில் புதிய கட்டிடத்துக்கான அஸ்திவாரக்கல் சிற்பாசாரியாரான திரு. தங்கவேல் ஆசாரியால் சென்ற வெள்ளிக்கிழமை நாட்டப்பட்டது. திருக்கேதீச்சர ஆலய அமைப்பைப் போல் கட்டப்படவிருக்கும் இக்கட்டிடத்துக்கான படத்தை புக்கிரிசாமி என்பவர் வரைந்துள்ளார். ஒரு வருடத்துக்குள் கட்டிட வேலைகள் பூர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சாமிச்செட்டியார் தான் பழநியில் இம்மூர்த்தியைச் செய்வித்து சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் இக்கோயிலைக் கட்டி, இங்கு பிரதிஷ்டை செய்ததாக அறிந்தேன். அழகான இயற்கைச் சூழலில் மிக அமைதியான இடம்.

கொழும்புத்துறை முனிவரின் ஆசிரமத்துக்கு நேரெதிரே உள்ள இக்கோயிலில் தான், கந்தபுராண படனம் நடைபெறக் கடைசியாக முனிவர் திருவுள்ளம் செய்தாராம்.

பழநிக்குச் செல்லமுடியாதவர்கள், இக்கோயிலுக்கு வந்து அதே அருளைப் பெறத்தான், அவர் இங்கு கோயில் கொண்டிருக்கிறார் போலும்.

* * *

**Important Announcement**

**Secretarial and Accountancy Tutory**

1. The above institute also provides tuition for Intermediate Examination of the Institute of Bankers to be held in September.

2. Applications for all courses inclusive of the Intermediate of Cost and Works Accountants and Chartered Secretaries will be finalised before 30th instant.

3. Failing accommodation in the morning or After noon Sessions, accommodation can be provided in the evening courses which will be from 5 — 7 p. m.

4. The composite fees per month for Secretaries Intermediate is Rs 50/-, for cost and Works Rs 60/- and for Banking Rs. 40/- The fees per subject is Rs. 15/-.

Contact Registrar: Kumaraswamy Buildings, Opposite Bus Stand, Power-House Road, Grand Bazaar, Jaffna. 257

வரி விளம்பரம்

**வாடகைக்கு**

நவீன வசதிகளுடன் கூடிய இரண்டு வீடுகள் வாடகைக்குக் கொடுக்கப்படும். நாவலர் வீதி - கஸ்தூரியார் வீதி சந்திக்கு அருகாமையில். கலந்து கொள்க. 193, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 266.

**காணவில்லை**

24-ந் திகதி எனது சயிக்கிளில் கட்டியிருந்த கணக்குப் புத்தகம்தவறிப்போய்விட்டது. ஆரியகுளச் சந்தியிலிருந்து குருநாதகோயிலுக்கிடையில். கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து மு. சி. வேலுப்பிள்ளை, சிரும்பியடி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்குச் சேர்ப்பிக்கவும் தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். 268.

**யாழ் கலாக்ஷேத்திரம்**

1/5, கேசாவில் பிள்ளையார்வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி கலாக்ஷேத்திரத்தில் பரதநாட்டியம், கதக்களி, வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின் ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன. சேர விரும்பும் மாணவர்கள் தயவு செய்து மேற்காட்டிய முகவரியில் தொடர்பு கொள்ளவும். வ. கிருஷ்ணபிள்ளை, காரியதரிசிக்காக. 252

**தேவை**

இணுவில் ஸ்ரீ கணேசா ஸ்ரோருக்கு வியாபார அனுபவமும் கணக்கு அனுபவமும் உடைய நிசீற் உதவியாளர் உடனடியாகத் தேவை. சேவைத் தகைமை குறித்து விண்ணப்பிக்குக. 45 வயதுக்குட்பட்டோர் விரும்பப்படுவர். 264

**தொய்வு, நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற பிரமுகர்கள் அடங்கிய கற்றலைக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.

விண்ணினர் மதிசூடிய
வேந்தனை
எண்ணி நாமங்கள் ஏத்தி
எழுந்தஞ்சுங்
சண்ணினற் கழல் காண்
பிட மேதெனில்
புண்ணியன் புகலூருமென்
நெஞ்சமே.

— திருநாவுக்கரசு

# திறந்த மனதுடன் பேச அப்துல்லாவுக்கு வாய்ப்பு

## அரசாங்கம் வழங்குமென திரு. சாஸ்திரி அறிவிப்பு

புதுடில்லி, ஏப்ரல் 27

காஷ்மீர் சம்பந்தமாக திரு. ஷேக் அப்துல்லா திறந்த மனத்துடனேயே இருப்பதாக இந்திய அரசாங்கம் நம்புகிறதென ராஜ்ய சபையில் கேட்ட கேள்வி ஒன்றுக்கு இலாகா இல்லாத மந்திரி திரு. லால் பகதூர் சாஸ்திரி பதிலளித்தார். இந்த வகையில் இந்திய அரசாங்கத்துடன் பேச்சு நடத்த அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படும் என்றும் சாஸ்திரி கூறினர்.

"ஷேக் அப்துல்லா பல இடங்களில் பலவிதமாகப் பேசியிருக்கிறர். ஆயினும் அவரது முடிவான தீர்மானம் எதுவும் அறிவிக்கப்படவில்லை" என்றும் சாஸ்திரி கூறினர்.

"ஷேக் அப்துல்லா தேசிய ஒருமைப்பாட்டை மறுக்கும் வகையில் பேசியிருக்கிறர்" என ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டபோது, "எல்லாவற்றிற்கும் ஒரு வரம்பு உண்டு. அவர் மீது உடனடியாக சட்ட, நிர்வாக நடவடிக்கை எடுப்பதற்கில்லை" என்றும் திரு. சாஸ்திரி கூறினர்.

"நெடுங்காலம் ஒருவர் பிரிவினை பிரசாரம் செய்ய அனுமதிக்க முடியாது" என்றும் மந்திரி குறிப்பிட்டார்.

காஷ்மீர் போர் நிறுத்த எல்லைக் கோர்ட்டில் 7 தடவை பாகிஸ்தானியர் தாக்குதல் நடத்தியிருக்கிறர்கள் என்றும், 36 முறை எல்லைக்கோடு மீறப்பட்டது என்றும் அறிவிக்கப்பட்டது.

## "இளைஞர் முன்வர வேண்டும்"

சுழிபுரம், திங்கள்

சித்தங்கேணி இளைஞர் எட்டாவது ஆண்டு நிறைவு விழா சித்தங்கேணி பிள்ளையார் கோவில் வீதியில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

உலகத்தில் மனித சமுதாயத்தை முன்னேற்றச் செய்யும் சக்தி இளைஞர்கள் தான். ஆனல் இந்த இளைஞர்களை வழி நடத்திச் செல்ல நல்ல அனுபவம் உள்ள பெரியார்கள் தான் தேவை. இன்று உலகத்திலுள்ள அடிமைப்பட்ட இனம் உரிமைக்குரல் எழுப்பும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கின்றேம். அடிமைப்பட்ட நாடுகள் சில இன்று பூரண உரிமை பெற்று ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகித்து தமது குரலை எழுப்புவதை நாம் கேட்கத்தான் செய்கிறேம். ஆனல் இன்று நாம் எமது நாட்டில் உரிமையுடன், மானத்துடன் வாழ முடியவில்லை. இவற்றை எல்லாம் எமது வாலிபர்கள் நன்கு கவனித்து தமது வாழ்வை வகுக்க முன்வர வேண்டும்.


REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows Sats.&Suns. Four
PETER SELLERS
in
TRIAL and ERROR
From 1-5-64
TOKYO by NIGHT



வெற்றிகரமான 5வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை) விஜிதா (ஹட்டன்)



எம். ஜி. ராமசந்திரன் — பி. சரோஜாதேவி நடித்த

பெரிய இடத்துப் பெண்

3வது வெற்றிகரமான வாரம்!

மைலன் (கொழும்பு) நவா (கொம்பனித் தெரு)

மற்றும் 5 திரைகளில்

எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
புஷ்பலதா — கருணாநிதி
நடித்த

பணம் பந்தியிலே


# சமஸ்கிருதப் பரீக்ஷை முடிவுகள்

சென்ற பெப்ரவரி இறுதியில் நடந்த அமரபாரதி பரீட்சா சமிதியின் சமஸ்கிருதப் பரீட்சை முடிவுகள் வெளிவந்திருக்கின்றன. பிராதமிகா, மத்யமா என்னும் இரு பரீட்சைகளுக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளில் இருவர் தவிர மற்றெல்லோரும் சித்தியெய்தி இருப்பதோடு, இருவர் வெள்ளிப் பதக்கப் பரிசுகளும் நால்வர் பாராட்டுப் பரிசுகளும் பெறுகின்றனர். ஐம்பது பரீட்சார்த்திகள் தோற்றாத காரணத்தால் எவரும் தங்கப் பதக்கப் பரிசுபெற முடியவில்லை.

இப் பரீட்சைகளை மீண்டும் ஆகஸ்ட் மாதத்தில் நடத்துவதற்கும், இலங்கைப் பல்கலைக்கழகப் பிரவேச பரீட்சைக்கு சமஸ்கிருதம் படிக்கும் பரீட்சார்த்திகளுக்காக அவர்களுக்குரிய சமஸ்கிருத பாடப் புத்தகத்தில் ஒரு பரீட்சை நடத்தி அதில் சித்தியெய்துபவர்களுக்கும் திறமை காட்டுபவர்களுக்கும் தகுதிப் பத்திரங்களும் பலவித பரிசுகளும் வழங்குவதற்கும் அமரபாரதி சமிதியின் இலங்கைக் கிளை ஆயத்தம் செய்துகொண்டிருக்கிறது. இப் பரிசுகளை வழங்க சில ஸ்தாபனங்களும் அபிமானிகளும் முன்வந்துள்ளனர்.

பிராதமிகா மத்யமா பரீட்சைகளின் பெறுபேறுகள் பின்வருமாறு:

### I பிராதமிகா பரீட்சை

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**

முதற்பிரிவு — உயர்தரசித்தி வெள்ளிப்பதக்கப் பரிசுபெறுபவர்: க. மல்லிகைப் புஷ்பம். பாராட்டுப்பரிசு பெறுபவர்கள்: க. சரோஜா, சி. ஞானம்மா, ந. வேதநாயகாம்பாள், ஆ. புஷ்பம்.

முதற்பிரிவு சாதாரணசித்தி: க. லலிதாதேவி, பொ. மகாலக்ஷ்மி.

இரண்டாம் பிரிவு: மு. மதனகாந்தி.

மூன்றும் பிரிவு: இ. சாம்பவி, ப. பாலாம்பிகை.

**புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி**

முதற்பிரிவு— உயர்தரசித்தி வெள்ளிப்பதக்கப் பரிசுபெறுபவர்: நா. செல்லம்மா.

முதற்பிரிவு—சாதாரணசித்தி: செ. இரத்தினராஜா.

இரண்டாம் பிரிவு: இ. மனேன்மணி, சி. சிவபாலன்.

மூன்றும் பிரிவு: க. வைத்தியநாதன், ஆ. தனபாலகிருஷ்ணன்.

**நீர்வேலி வேதாகமபாடசாலை**

இரண்டாம் பிரிவு: க. நடராஜசர்மா, ப. சிவானந்தசர்மா.

மூன்றும் பிரிவு: ப. முத்துக்குமாரசாமி சர்மா.

வெளிப் பரீட்சார்த்தி சி. பொன்னையாஐயர் (துன்னலை)

### II மத்யமா பரீட்சை

**நீர்வேலி வேதாகம பாடசாலை.**

முதற்பிரிவு: வை பாஸ்கரசர்மா, ப. நித்தியானந்தசர்மா.

இரண்டாம்பிரிவு: ஆ. இராமநாதசர்மா. சு. ஸ்ரீதரசர்மா.

மூன்றும் பிரிவு: ச. கந்தராஜேஸ்வரசர்மா.

## பெட்ரேலியம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றப்பகுதிகளுக்கு பெட்ரேல் அனுப்ப முடியாத நிலை ஏற்படும். எனவே அப்பகுதிகளில் பெட்ரேல் தட்டுப்பாடு ஏற்படுமெனவும் எதிர்பார்க்கலாம்.

**யாழ்ப்பாணத்தில்**

யாழ்ப்பாணத்தில் உள்ள பெட்ரேல் நிலையங்களில் விசாரித்தபோது சங்கத்தின் தலைமைப்பீடத்திலிருந்து எதுவும் கிடைக்கவில்லை என்றும் அங்கிருந்து உத்தரவு கிடைத்ததும் தாம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மத்திய பெட்ரேல் நிலையத்தில் உள்ள வவுசர்களுக்கும், தாங்கிகளுக்கும், மற்றும் நிலையங்களிலுள்ள தாங்கிகளுக்கும் 'சீல்' வைக்குமாறு தலைமைக் காரியாலயம் உத்தரவிட்டுள்ளது இதனல் தலைமைக் காரியாலயத்திலிருந்து மறு அறிவித்தல் வரும்வரை பெட்ரேல் விநியோகிக்கப்படமாட்டாது எனவும் அறியப்படுகிறது.

# "தென்ரொடீஷியா கலப்பதை விரும்பமாட்டோம்"

## காமன்வெல்த் பிரதமர் மகாநாடு பற்றி நேரு

புதுடில்லி, ஏப். 27

அடுத்த ஜூலை மாதம் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் தென்ரொடீஷியா கலந்து கொள்வதுபற்றி இந்தியாவிடம் ஆலோசனை கேட்கப்படுமானல் நாம் அதற்குச் சம்மதிக்கமாட்டோம் எனப் பிரதமர் நேரு லோகசபையில் கூறினர். ஆலோசனைப்பட்டியல் இந்தியாவுக்கு இன்னும் கிடைக்கவில்லை என்றும் திரு. நேரு கூறினர்.

காமன்வெல்த் மகாநாட்டில் இந்தியாவைப் பாதிக்கும் பிரச்னை வரும் எனத் தாம் நம்பவில்லை என்றும் பிரதமர் அறிவித்தார்.

"காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு வரவரப் பெரிதாகி வருகிறது" என ஓர் அங்கத்தினர் குறிப்பிட்டதற்கு "சிறியகமிட்டி ஒன்று அமைக்கப்படும் யோசனை இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது" என்றும் பிரதமர் நேரு கூறினர்.

# எஸ். ஜே. வி. க்கு சிமெந்து

## கார்ப்பரேஷன் பதில் தலைவர் பதில்

நல்லூர், செவ்வாய்

காங்கேசன் துறையில் உள்ள சிமெந்துத் தொழிற்சாலையில் தொழிற் பயிற்சி பெறுவதற்கு அப்பகுதி இளைஞர்களுக்கு சந்தர்ப்பமளிக்கப்படவில்லை என்று கூறுவது தவருனதாகும் என கார்ப்பரேஷனின் பதில் தலைவர் திரு. பொன்னம்பெருமா தமிழரசுத் தலைவரும் காங்கேசன்துறை எம். பி.யுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு இதுசம்பந்தமா எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

விளம்பரப்படுத்தப்பட்டு, தக்க தராதரமுடையவர்களே தொழில் பயிற்சி பெற தெரிந்தெடுக்கப் படுகிறர்களெனவும் காலி, புத்தளம் ஆகிய இடங்களில் அமைக்கப்படவிருக்கும் சிமெந்துச் சாலைகளில் வேலை செய்வதற்குமாகவே இப்பொழுது தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது எனவும் பதில் தலைவர் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தொழில் பயிற்சிக்கு இளைஞர்களைத் தெரிந்தெடுக்கும் போது தமது தொகுதி மக்கள் புறக்கணிக்கப்படுகிறர்கள் என்றும், அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் எனவும் முறையிட்டு திரு. செல்வநாயகம் எழுதிய கடிதத்துக்கான பதில் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுளதாவது:-

தொழில் பயிற்சிக்கு அதிகமாக தொழிற்சாலைகள் உள்ள இடத்தைச் சேர்ந்தவர்களே தெரிந்தெடுக்கப்படுவது வழக்கம். எனவே காங்கேசன் துறை தவிர்ந்த ஏனைய இடங்களிலும் அமைக்கப்படவிருக்கும் தொழிற்சாலைகளுக்கு காங்கேசன் துறையிலிருந்து மட்டும் தான் ஆட்களை தெரிவுசெய்யவேண்டும் என நிர்ப்பந்திப்பது முறையாகாது.

கடந்த பல வருட காலமாக தொழிற்சாலை தொழிலாளர் தொகை அளவுக்கு மேற்பட்டுள்ளதால் நாளாந்த சம்பளம் பெறும் ஊழியர்களை நிரந்தரமாக்குவது கடினமாகவே உள்ளது.

நாளாந்த சம்பள தொழிலாளர்கள் அதிகமாக தினசரி அடிப்படையிலேயே வேலைக்கமர்த்தப்படுவது வழக்கம். ஆனல் நாம் இவர்களுக்கு மூன்று மாத ஒப்பந்த சலுகை அளிப்பதோடு தேவைப்படும் நேரங்களில் திரும்பவும் வேலைக்கமர்த்துகிறேம்.


## காணமற் போய்விட்டது

செ. ஐயாத்துரை P 861726
செ. மாரிமுத்து P 861727
செ. துரைசாமி P 861716

மேற்கண்ட 3 அரிசிக் கூப்பன்களும் கந்தர்மடத்திலிருந்து பலாலி ரேட்டால் வரும் பொழுது முட்டாசுக்கடைக்கிடையில் விழுந்துவிட்டது. தயவுசெய்து இந்த கூப்பன்களைக் கண்டு எடுப்பவர்கள் K. K. S. வீதியில் உள்ள சாம்பசிவம் பிடவைக்கடையில் கொடுத்தால் அதற்குத் தக்க உபகாரம் கொடுக்கப்படும்.

269



## ORDER NISI

In The District Court of Jaffna.

In the matter of the Intestate Estate of the late Ramalingam Ponnuthurai of Neervely.

Ponnuthurai Sivaganasundaram of Kokuvil Jaffna.

Petitioner.

No. Testy 1425

This matter coming on for disposal before N. Sivagnanasunderam, Esquire, District Judge of Jaffna on the 20th day of January 1964 in the presence of Mr V. Navaratnarajah Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 18th day of January 1964 having been read

It is Ordered that Letters of Administration to the estate of the deceased abovenamed be issued to the Petitioner abovenamed as the lawful son of the deceased, unless any person or persons interested shall on or before the 20th day of March 1964 show sufficient cause to the satisfaction of this Court to the contrary

This 20th day of January 1964.

(Sgd). P. Somatilakam,
District Judge, Jaffna.

Time to show cause is extended to 15 th may 1964.

Sgd: N. Sivagnanasunderam,
District judge,
Jaffna.

338 25-3-64



## மரண அறிவித்தல்

**மீனம்பா**

காலஞ் சென்ற துன்னலை சிதம்பரப்பிள்ளையின் மனைவியும், திரு. கே. எஸ். பொன்னம்பலம், திருமதி சுந்தரலஷ்மி நாகலிங்கம், டாக்டர் எஸ். ராஜசூரியர் ஆகியோரின் தாயாரும், திரு. க. நாகலிங்கம் அவர்களின் மாமியாரும், சதானந்தனின் பேத்தியாருமாகிய திருமதி மீனம்பா சிதம்பரப்பிள்ளை காலமாகிவிட்டார். இன்று (28-4-64) மாலை 4-30 மணியளவில் நல்லூர் கைலாச பிள்ளையார் கோவிலடியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து அன்னரது பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

270 எஸ். ராஜசூரியர்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.